செய்தி வெளியீடு எண்.696 நாள்: 9.10.2009

## தமிழ்நாடு கடல்சார் வாரியம் சார்பில்
## தமிழக அரசுக்கு 2 கோடியே 75 இலட்சம் ரூபாய்
## வருவாய்ப் பங்குத் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம்
## நெடுஞ்சாலை (மற்றும்) சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் வழங்கினார்!

தமிழகத்தில் உள்ள சிறுதுறைமுகங்கள் மற்றும் துறைமுக வசதிகளை மேம்படுத்துவதற்காக 1997 ஆம் ஆண்டில் அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாடு கடல்சார் வாரியத்தினை உருவாக்கியது.

தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்பட்டுவரும் இந்த கடல்சார் வாரியம் தொடக்கத்தில் 11 சிறுதுறைமுகங்கள் வாயிலாக ஆண்டு ஒன்றுக்கு 40 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் குறைவான சரக்குகளைக் கையாண்டு வந்தது.

2007இல் இந்த அரசு வகுத்தளித்த சிறுதுறைமுகங்கள் மேம்பாட்டுக் கொள்கை தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் மற்றும் வணிகத் துறைமுகங்களுக்கு அனுமதி வழங்கும் முறைகளை நிர்ணயித்ததுடன், துறைமுக வசதிகளின் முழுமையான பயன்பாட்டிற்கு ஏதுவாக தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் இதர வணிக சரக்குளைக் கையாளுவதற்குரிய அனுமதிகளையும் வழங்கிட வழிவகுத்தது.

இதன்காரணமாக சிறுதுறைமுகங்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்து 2008–2009 ஆம் ஆண்டில் இத்துறைமுகங்கள் வாயிலாக 9 இலட்சம் மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டு, அதன் மூலம் 7 கோடியே 33 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. இத்துடன் இதர வருவாய் இனங்களையும் சேர்த்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மொத்த வருவாய் 15 கோடியே 10 இலட்சம் ரூபாய் என உயர்ந்துள்ளது.

இத்தொகையிலிருந்து தமிழக அரசுக்கான வருவாய்ப் பங்குத் தொகையாக 2 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்குரிய காசோலையை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சார்பில் அதன் தலைவரும் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சருமான திரு. வெள்ளக்கோவில் மு.பெ. சாமிநாதன் இன்று (9.10.2009) வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் திரு. கோ. சந்தானம், இ.ஆ.ப., தமிழ்நாடு கடல்சார் வாரியத் துணைத் தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு. மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., மாநிலத் துறைமுக அலுவலர் கேப்டன் ச. சாய்நாத் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.